தினகனி

செய்திகள் மற்றும் விளம்பரங்கள் தொடர்புக்கு:

94436 99066

namadhudhinakani@gmail.com

www.dhinakani.com

RNI-TNTAM/2023/88253

நமது தினகனி


NAMADHU DHINA KANI

காலை நாளிதழ்






| Vol: 02 | Issue: 48 | 4 Pages | 17.9.2024 | Tuesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 48 | 4 பக்கங்கள் | 17.9.2024 | செவ்வாய்க்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |

**கூற்றங் குதித்தலுங் கைகூடும் நோற்றலின்**

**ஆற்றல் தலைப்பட் டவர்க்கு**

**விளக்கம்:**

தவம் செய்வதால் பெறத்தக்க ஆற்றலைப் பெற்றவர்க்கு (ஓர் இடையூறும் இல்லையாகையால் ) எமனை வெல்லுதலும் கைகூடும்

## இந்தியாவுடன் பிரச்சினை இல்லை: மாலத்தீவு



மாலே, செப். 17

இந்தியாவுடன் எந்த பிரச்சினையும் தற்போது இல்லை என்று மாலத்தீவு வெளியுறவுத்துறை மந்திரி மூசா ஜமீர்கூறியுள்ளார். இதுதொடர்பாக அவர் கூறியிருப்பதாவது: மாலத்தீவில் இருந்து இந்திய படைகளை வெளியேறும்படி, அதிபர் முகமது முய்சு உத்தரவிட்டதை தொடர்ந்து, இரு நாடுகளுக்கு இடையேயான உறவில் விரிசல் ஏற்பட்டது. எங்கள் அரசின் துவக்கக் காலத்தில், இந்தியாவுடன் கசப்பான உறவு இருந்தது என்பது அனைவருக்கும் தெரியும். இந்தியா மாலத்தீவு இடையே இருந்த தவறான புரிதல்கள் தற்போது தீர்த்து வைக்கப்பட்டு விட்டன. சீனா மற்றும் இந்தியாவுடன் நாங்கள் நல்ல உறவைக்கொண்டுள்ளோம். இருநாடுகளும் மாலத்தீவை ஆதரிக்கின்றன" என்றார்.

மாலத்தீவுக்கும் இந்தியாவுக்கும் இடையேயான உறவில் கடந்த சில மாதங்களாக விரிசல் ஏற்பட்டுள்ளது. பிரதமர் மோடியின் லட்சத்தீவு பயணத்தைமாலத்தீவுமுன்னாள்மந்திரிகள், விமர்சித்ததுகடும்சர்ச்சையை ஏற்படுத்தியது. இதையடுத்து, இந்தியர்கள் பலரும் தங்கள் மாலத்தீவு பயணத்தை ரத்து செய்தனர். மாலத்தீவு அதிபர் முகம்மது முய்சுவும் இந்திய ராணுவத்தினரை வெளியேற உத்தரவிட்டார். அடுத்தடுத்து இந்தியா மாலத்தீவு இடையேயான மனக்கசப்பு அதிகரித்த நிலையில், தற்போது மாலத்தீவு வெளியுறவுத்துறை மந்திரி, எந்த பிரச்சினையும் இல்லை எனக் கூறியுள்ளார்.

## டிரம்ப் கோல்ப் விளையாடிய பகுதிக்கு அருகே துப்பாக்கி சூடு: ஒருவரிடம் விசாரணை ஜோ பைடன் தகவல்



வாஷிங்டன், செப். 17

அமெரிக்காவில் வருகிற நவம்பரில் அதிபர் தேர்தல் நடைபெற உள்ளது. இதனை முன்னிட்டு, அமெரிக்க முன்னாள் அதிபர் டிரம்ப் குடியரசு கட்சியின் வேட்பாளராக முன்னிறுத்தப்பட்டு உள்ளார். அவரை எதிர்த்து ஜனநாயக கட்சி சார்பில் துணை அதிபர் கமலா ஹாரிஸ் போட்டியிடுகிறார்.

இந்த சூழலில், சமீபத்தில் பென்சில்வேனியாவின் பட்லர் பகுதியில் நடந்த பேரணியில் டிரம்ப் பங்கேற்றபோது, அவர் மீது துப்பாக்கி சூடு நடத்தப்பட்டது. துப்பாக்கி குண்டு அவருடைய வலது காதின் மேல் பகுதியை துளைத்து சென்றது. துப்பாக்கி சூடு நடத்திய நபர் சுட்டு கொல்லப்பட்டார். இந்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.


இந்த நிலையில் நேற்று டிரம்ப், மேற்கு பாம் பீச் பகுதியில் உள்ள டிரம்ப் சர்வதேச கோல்ப் கிளப்புக்கு சென்று, கோல்ப் விளையாடி கொண்டு இருந்துள்ளார். அப்போது, திடீரென அவருடைய பார்வைக்கு உட்பட்ட தொலைவில் துப்பாக்கி சூடு நடத்தப்பட்டு உள்ளது. இதனை தொடர்ந்து அவர் பாதுகாப்பான பகுதிக்கு கொண்டு செல்லப்பட்டார். டிரம்ப் இருந்த பகுதிக்கு அருகில் துப்பாக்கி சூடு நடத்தப்பட்ட சம்பவம் அமெரிக்காவில் மீண்டும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பாக ஒருவரிடம் விசாரணை நடத்தப்பட்டு வருவதாக அமெரிக்க அதிபர் ஜோ பைடன் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

முன்னாள் அதிபர் டிரம்ப் மீதான கொலை முயற்சி என சந்தேகிக்கப்படும் துப்பாக்கி சூடு குறித்து மத்திய சட்ட அமலாக்கப் பிரிவினர் என்ன விசாரணை நடத்தி வருகின்றனர் என்பது குறித்து எனது குழுவினரால் எனக்கு விளக்கப்பட்டது. சந்தேகத்துக்குரிய ஒரு நபர் காவலில் உள்ளார். அவரிடம் விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. முன்னாள் அதிபரையும் அவரைச் சுற்றியிருப்பவர்களையும் பாதுகாப்பாக வைத்திருக்க சட்ட அமலாக்கப் பிரிவினருக்கு உத்தரவிட்டுள்ளேன்.

முன்னாள் அதிபருக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை என்பதில் நான் நிம்மதியடைந்துள்ளேன். அமலாக்க அதிகாரிகள் தீவிர விசாரணை நடத்தி, என்ன நடந்தது என்பது குறித்த கூடுதல் விவரங்களை சேகரித்து வருகின்றனர். நான் பலமுறை கூறியது போல், நம் நாட்டில் அரசியல் வன்முறைகள் உட்பட எந்தவிதமான வன்முறைகளுக்கும் இடமில்லை. முன்னாள் அதிபரின் பாதுகாப்பை தொடர்ந்து உறுதிப்படுத்துமாறு எனது குழுவிற்கு உத்தரவிட்டுள்ளேன். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

## பிரான்சில் இருந்து சட்டவிரோதமாக இங்கிலாந்துக்குள் நுழைய முயன்ற 8 பேர் கடலில் மூழ்கி பலி



பாரிஸ், செப். 17

ஆப்பிரிக்கா, ஆசியா உள்ளிட்ட பல்வேறு பகுதிகளை சேர்ந்தவர்கள் இங்கிலாந்திற்குள் சட்டவிரோதமாக நுழைந்து வருகின்றனர். இவர்களை தடுக்க இங்கிலாந்து அரசு முயற்சித்து வருகிறது. சட்டவிரோதமாக நுழைபவர்களை ருவாண்டா நாட்டிற்கு அனுப்பும் நடவடிக்கையிலும் இங்கிலாந்து அரசு ஈடுபட்டு வருகிறது. இந்நிலையில், பிரான்சில் இருந்து கடல் வழியாக இங்கிலாந்திற்குள் நுழைய முயன்ற 8 பேர் கடலில் மூழ்கி உயிரிழந்தனர்.

பிரான்ஸ் இங்கிலாந்து இடையேயான கடல் பகுதியில் இங்கிலீஷ் சேனல் வழியாக படகில் இங்கிலாந்திற்குள் நுழைய அகதிகள் நேற்று முயற்சித்தனர். அப்போது, அவர்கள் பயணித்த படகு கடலில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இதில், அகதிகள் 8 பேர் கடலில் மூழ்கி உயிரிழந்தனர்.

நடப்பு ஆண்டில் மட்டும் பிரான்சில் இருந்து இங்கிலாந்துக்குள் கடல்வழியாக சட்டவிரோதமாக நுழைய முயன்று ஏற்கனவே 43 பேர் உயிரிழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# சென்னை அண்ணா அறிவாலயத்தில் முதல்வருடன் திருமாவளவன் சந்திப்பு

## கூட்டணியில் எந்த ஒரு விரிசலும் இல்லை என்று பேட்டி

சென்னை, செப். 17

சென்னை அண்ணா அறிவாலயத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலினை இன்று காலை திருமாவளவன் சந்தித்து பேசினார். சந்திப்பிற்கு பிறகு திமுக கூட்டணியில் எந்த ஒரு விரிசலும் இல்லை என்று கூறினார்.

திமுக தலைவரும், தமிழ்நாடு முதல்வருமான மு.க.ஸ்டாலினை சென்னை அண்ணா அறிவாலயத்தில் இன்று காலை விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் திருமாவளவன் சந்தித்து பேசினார். அப்போது அமெரிக்காவிற்கு அரசு முறை பயணம் மேற்கொண்டு தமிழ்நாட்டிற்கு அதிக அளவிலான முதலீடுகளை ஈர்த்தமைக்காக சால்வை அணிவித்து வாழ்த்து தெரிவித்தார். இந்த சந்திப்பின் போது அமைச்சர்கள் துரைமுருகன், கே.என்.நேரு, க. பொன்முடி, எ.வ.வேலு, எம்பி ரவிக்குமார், எம்எல்ஏக்கள் சிந்தனை செல்வன், எஸ்.எஸ்.பாலாஜி, எம்.பாபு, ஆளூர் ஷா நவாஸ், முன்னாள் எம்பி ஆர்.எஸ்.பாரதி மற்றும் விடுதலை சிறுத்தைகள் கட்சி நிர்வாகிகள் உடன் இருந்தனர். சந்திப்புக்கு பின்னர் திருமாவளவன் அளித்த பேட்டி: அமெரிக்கா சுற்று பயணத்தை வெற்றிகரமாக முடித்த முதல்வர் மு.க.ஸ்டாலினை நேரில் சந்தித்து விசிக சார்பில் வாழ்த்துகள் மற்றும் பாராட்டுகளை தெரிவித்தோம்.

அமெரிக்காவில் பல நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பல ஆயிரம் கோடி முதலீட்டுகள் கையெழுத்தானது. இதற்கு முதல்வருக்கு பாராட்டுகளை தெரிவித்தோம். தமிழகத்தில் வரும் அக்டோபர் 2ம் தேதி விசிகவின் மகளிர் விடுதலை இயக்கம் சார்பில் மது மற்றும் போதை ஒழிப்பு மாநாடு நடைபெற உள்ளது. இதில் இரண்டு கோரிக்கை முன் வைக்கிறோம். முதலாவது, தமிழகத்தில் மது விற்பனை இலக்கு குறைக்க வேண்டும். இரண்டாவது, அரசியல் அமைப்பு சட்டத்தின்படி அனைத்து மாநிலங்கள் அரசும் மதுக்கடைகளை படிப்படியாக குறைக்க வேண்டும். மருத்துவத்துறையில் பயன்படுத்தும் மருந்தை தவிர வேற எந்த மருந்தும் புழக்கத்தில் இருக்க கூடாது. மதுவிலக்கில் அண்ணா உறுதியாக இருந்தார். ஒன்றிய அரசுக்கு அப்போது அழுத்தம் கொடுத்தார். அத்துடன் கலைஞரும் மதுவிலக்கில் ஒன்றிய அரசுக்கு அழுத்தம் கொடுத்துள்ளார். அவர்களை



போல முதல்வர் மு.க.ஸ்டாலின் ஒன்றிய அரசுக்கு அழுத்தம் தர வேண்டும் என்ற மனுவை கோரிக்கையாக கொடுத்து உள்ளோம். திமுகவின் கொள்கை மது விலக்கு என்பது எந்த மாற்றமும் இல்லை எனவும், மாநாட்டில் திமுக சார்பில் அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி மற்றும் செய்தி தொடர்பாளர் இளங்கோவனும் பங்கேற்பார்கள் என முதல்வர் தெரிவித்தார்.

மது விலக்கு தமிழ்நாட்டில் வர வேண்டும் என்பதில் மாற்றுக்கருத்து இல்லை. நிர்வாக சிக்கலை கருத்தில் கொண்டு படிப்படியாக குறைக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் முதல்வர் தெரிவித்துள்ளார். தேர்தலுக்கும் இந்த மாநாட்டிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை. பெண்களின் கோரிக்கையை முன்னிறுத்தி தான் இந்த மாநாட்டை நடத்துகிறோம். இதனை திசை திருப்பும் வகையில் அரசியலுடன் இணைத்து பார்க்க வேண்டாம். விசிகதிமுக கூட்டணியில் எந்த ஒரு விரிசலும் இல்லை. எங்கள் கொள்கையில் உறுதியாக இருக்கிறோம் அதனை முன்னிறுத்துகிறோம். மது ஒழிப்புஎன்பதுமக்கள்பிரச்னை. எனவே இதற்கு அனைத்து கட்சிகளும் இணைந்து குரல் கொடுக்கும் என்பது தான் என்னுடைய அறைகூவல். இதனை அரசியல் உடன் முடிச்சி போட வேண்டாம். இந்தியாவில் போதை புழக்கம் அதிகமாக உள்ளது. எனவே இதனை குறைக்க ஒன்றிய அரசுக்கு பங்கு உள்ளது. ஏன் அரசியல் அமைப்பு சட்டத்தை உருவாக்க கூடாது என்பது எங்களுடைய கேள்வி. மேலும் மது ஒழிப்பில் ஒன்றிய அரசுக்கு பொறுப்பிருக்கிறது என்று அண்ணா சொன்னதை தான் இன்று விசிக தெரிவிக்கிறது. இந்த கருத்தில் திமுக உடன்படுவதால் மாநாட்டில்பங்கேற்க2பிரதிநிதிகளை அனுப்பி வைக்க உள்ளார். இவ்வாறு அவர் கூறினார்.

## வடக்கு மண்டல திமுக உறுப்பினர் கூட்டம்; கட்சிக்கு உண்மையாக உழைத்தால் பதவி தேடி வரும்: மேயர் மகேஷ்



நாகர்கோவில், செப். 17

நாகர்கோவில் ஒழுகினசேரி திமுக மாவட்ட தலைமை அலுவலகத்தில், வடக்கு பகுதி பொது உறுப்பினர்கள் கூட்டம் நடந்தது. வடக்கு பகுதி செயலாளர் ஜவகர் தலைமை வகித்தார். மாநகர செயலாளர் ஆனந்த் முன்னிலை வகித்தார். அவைத்தலைவர் பன்னீர் செல்வம் வரவேற்றார். கூட்டத்தில் குமரி கிழக்கு மாவட்ட செயலாளர் மேயர் மகேஷ் பேசியதாவது: 2019ல் நடைபெற்ற பாராளுமன்ற தேர்தலில் திமுக கூட்டணி 39 இடங்களில் வெற்றி பெற்றது.

தொடர்ந்து நடந்த சட்டமன்ற தேர்தலில் பெருவெற்றியை பெற்றதுடன், கடந்த பாராளுமன்ற தேர்தலில் 40 இடங்களிலும் வெற்றி பெற்றது. இது ஸ்டாலின் நிர்வாக திறமைக்கும், மக்கள் நலத்திட்டங்களுக்கும் மக்கள் அளித்த வெகுமதி. இந்த வெற்றி பாதை இனிவரும் காலங்களிலும் தொடரும். திமுகவில் முன்பு வட்ட செயலாளர் பதவிக்கு வருவது கூட மிகவும் சிரமம். அதற்காக அவர்கள் கடுமையாக உழைத்திருக்க வேண்டும். தற்போது சிலருக்கு எளிதாக அந்த பதவி கிடைத்துள்ளதால், அதன் அருமை தெரியாமல் உள்ளனர்.

கட்சிக்காக உழைக்காமல் உள்ளனர். திமுக சார்பில் போராட்டம், பொதுக்கூட்டம் என்று அழைத்தால் தான் 5 பேரை அழைத்து வருவருவதாக கூறிவிட்டு, அவர்கள் மட்டும் தனியாக வருகின்றனர். இது சரியல்ல. கட்சி தலைமை மக்களுடனும், தொண்டர்களையும் உன்னிப்பாக கவனித்து வருகிறது. நீங்கள்கட்சிக்காகஉழைத்தால் கேட்காமலேயே உங்களுக்கு கட்சியில் மட்டுமின்றி மக்கள் பிரிதிநிதி பதவிகளும் உங்களை தேடி வரும். ஏழை மக்கள், பெண்கள், மாணவிகள், மாணவர்கள் என அனைத்து தரப்பினருக்கும், ஜாதி மத வேறுபாடின்றி நலத்திட்டங்களை முதல்வர் ஸ்டாலின் தந்து கொண்டுள்ளார்.

அவரது வழியில் உதயநிதி ஸ்டாலினும் 24 மணி நேரமும் மக்கள் பணியாற்றி வருகிறார். செயல்படாத அதிகாரிகள் மீது நடவடிக்கை மேற்கொண்டு வருகிறார். அவரை துணை முதல்வராக நியமிக்க முதல்வர் ஸ்டாலினுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளோம்.

இவ்வாறு அவர் பேசினார். கூட்டத்தில் தொமுச சிதம்பரம், இளைஞரணி அமைப்பாளர் அகஸ்தீசன், மாநகர இளைஞரணியை சேர்ந்த சிடி சுரேஷ், மணிகண்டன், சேக் மீரான், ஜனார்த்தனன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



விழுப்புரம் மாவட்டம் திருவெண்ணெய்நல்லூர் அருகே சிறு மதுரை கிராமத்தைச் சேர்ந்த வேல்முருகன் என்பவருடைய விவசாய நிலத்தில் 3 ஏக்கர் பரப்பளவில் கரும்பு பயிரிட்டு இருந்தார் இந்த நிலையில் 16.09.2024 அன்று மின் கசிவு காரணமாக திடீரென தீப்பற்றி எரிந்ததால் அக்கம் பக்கத்தினர் உடனடியாக திருவெண்ணெய்நல்லூர் தீயணைப்பு துறை அலுவலகத்துக்கு தகவல் தெரிவித்தனர். தகவல் அடிப்படையில் விரைந்து வந்த தீயணைப்புத் துறை வீரர்கள் பற்றி எரிந்த கரும்பைதோட்டத்தை அணைத்தனர். இதனால் அந்தப் பகுதியில் சில நேரம் பரபரப்பு நிலவியது . இந்த நிலையில் பாதிக்கப்பட்ட விவசாயிக்குஉரிய இழப்பீடு வழங்க வேண்டும் என கோரிக்கை வைக்கப்பட்டது.

## காடாம்புலியூர் பத்திரப்பதிவு அலுவலகத்தில் 2 லட்சம் பறிமுதல்



கடலூர், செப். 17

டாம்புலியூர் பத்திரப்பதிவு அலுவலகத்தில் பத்திரப்பதிவு செய்ய வரும் பொது மக்களிடம் அதிகம் லஞ்சம் பெறுவதாக வரப்பெற்ற தகவலை அடுத்து கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு துணை கண்காணிப்பாளர் சத்யராஜ் மேற்பார்வையில் கடலூர் மாவட்ட ஆய்வுக்குழு ஆய்வாளர் சுஜாதாதலைமையில்கடலூர்ஊழல்தடுப்புமற்றும்கண்காணிப்பு பிரிவு போலீசார் காடாம்புலியூர் பத்திரப்பதிவு அலுவலகத்தில் இன்று மாலை திடீர் ஆய்வு மேற்கொண்டனர். இதில் கணக்கில் வராதலஞ்சப்பணம்ரூபாய்2லட்சத்து17ஆயிரம்கைப்பற்றப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.




மாவட்ட கலெக்டர் கிறிஸ்துராஜ் தலைமையில் திருப்பூர் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் சமூக நீதி நாள் உறுதிமொழி அனைத்துறை அலுவலர்கள் முன்னிலையில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. உடன் மாவட்ட வருவாய் அலுவலர் கார்த்திகேயன், தனித்துறை கலெக்டர் ஜெயராமன் உள்பட பலர் உள்ளனர்.

# செங்கல்பட்டு மாவட்டம் அச்சிறுப்பாக்கம் 99 காபி குழுமத்தின் வளாகத்தில் பாத நிவாரணா பாத அழுத்த சிகிச்சை மைய துவக்க விழா



செங்கல்பட்டு செப்.17

செங்கல்பட்டு மாவட்டம் அச்சிறுப்பாக்கம் 99 காபி குழுமத்தின் வளாகத்தில் பாத நிவாரணா பாத அழுத்த சிகிச்சை மைய துவக்க விழா நடைபெற்றது. அச்சிறுப்பாக்கம் அருகே அண்ணா நகர் பகுதியில் செயல்பட்டு வரும் 99 கிலோ மீட்டர் காபி வளாகத்தில் பாத அழுத்த சிகிச்சை துவக்க விழா நடைபெற்றது. மலேசியா நாட்டில் பாத அழுத்த சிகிச்சை முதல் முதலில் தொடங்கப்பட்டது. அதனை தொடர்ந்து இந்தியாவில் சென்னை பகுதியில் உள்ள பார்வையற்றவர்களுக்கு முக்கியத்துவம் தந்து அவர்களுக்கு பாத நிவாரண மையம் மூலம் சிறப்பு பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகிறது. மேலும் அதன் சிகிச்சை பயன்கள் மன அழுத்தம் மற்றும் கவலையை குறைக்கிறது, துக்கத்தை மேம்படுத்தி நல்ல மனநிலையை அளிக்கிறது,

உடல் வலியைப் போக்குகிறது, செரிமானத்தை மேம்படுத்துகிறது நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்துகிறது, தலைவலி மற்றும் ஒற்றைத் தலைவலிக்கு நல்ல நிவாரணம் தருகிறது, உடலின் உள்உறுப்புகளுடன் தொடர்புடைய புள்ளிகளுக்கு பாத அழுத்த சிகிச்சை கொடுப்பதன் மூலம் இரத்த ஓட்டம் சீராகி நலன் பயக்கிறது. உள்ளிட்ட சிகிச்சை அளித்து வருகின்றனர். அதன் ஒரு பகுதியாக அச்சிறுப்பாக்கம் பகுதியில் உள்ள அண்ணாநகர் 99காபி குழும வளாகத்தில் பாத நிவாரண மையம் 99 குழுமத்தில் இயக்குனர் மனோசாலமன் தலைமையில் துவக்கி வைக்கப்பட்டது.

இவ்விழாவில் திரைப்பட இயக்குனர் அழகியல் வித்தகர் என். லிங்குசாமி கவிஞர் எழுத்தாளர் பாடலாசிரியர் பாவலர் அறிவுமதி, தலைவர் எக்ஸ்னோரா சர்வதேச அமைப்பு செந்தூர்பாரி, எழுத்தாளர் இயக்குனர் திரைக்கதை ஆய்வாளர் அஜயன்பாலா, ஃபஸ்ட் வேர்ல்ட் கம்யூனிட்டி நிறுவனர் டாக்டர் சி.கே.அசோக்குமார், பாத நிவாரணா உரிமையாளர் அம்பிகாராஜ், இயக்குனர் சரன், நடிகர் அபிஷேக், உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

மேலும் இவ்விழாவில் கலந்து கொண்ட அனைவரும் பாத நிவாரணா அழுத்த சிகிச்சை பெற்று தொடங்கிவைத்தனர். குறிப்பாக பாத நிவாரணா 1000க்கும் மேற்பட்ட பார்வையற்றவர்களுக்கு வேலைவாப்பு வாங்கி தருவது நோக்கம் என தெரிவித்தனர்.

# ஊராட்சி ஒன்றியம் நடுநிலைப் பள்ளி நடுவக்குறிச்சி பாளையங்கோட்டை தாலுகா இலவச மருத்துவ முகாம்



வேலூர், செப். 17

ஊராட்சி ஒன்றியம் நடுநிலைப் பள்ளி நடுவக்குறிச்சி பாளையங்கோட்டைதாலுகாஇலவச மருத்துவ முகாம் நடைபெற்றது. இதில் அகர்வால் கண் மருத்துவமனை மருத்துவ குழுவினர் ஆறு பேர் மற்றும் Prof. Haji. Dr. M. B. Hasan Ibrahim Dental Clinic சார்ந்த மருத்துவர் Dr. H.I. Al jainaf Fatima ஆகியோர் கண் மற்றும் பல் மருத்துவ முகாம் கலந்து கொண்டனர் மேலும் முகாமின் ஒருங்கிணைப்பு செய்தவர்கள் 1. M. Narayana Kumar Social worker 2. S. Muthu Pattan Social worker 3. Dr. B. FELIX FRANCY Professor cum social worker நல்லோர் வட்டம் திருநெல்வேலி மொத்த பயனாளிகள் 75 பேர் கண் மருத்துவ பயனாளிகள் 46 பல் மருத்துவ பயனாளிகள் 29 வருகை தந்த அனைவருக்கும் Tooth paste இலவசமாக வழங்கப்பட்டது.

# சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மக்கள் குறைதீர்க்கும் நாள் முகாம்



சிவகங்கை:செப் 17

சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பாரம் தோறும் நடைபெறும் மக்கள் குறைதீர்க்கும் நாள் முகாமில் மாவட்ட ஆட்சித் தலைவர் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்

சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலக மக்கள் குறைதீர்க்கும் முகாம் கூட்டுறங்கில்நடைபெற்ற நிகழ்விற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் ஆஷா அஜித் தலைமையில் சுமார் 8 லட்சம் அதிகமான நலத்திட்ட உதவிகளை பயனளிகளுக்கு மாவட்ட ஆட்சியர் நேரடியாக வழங்கினார் அதன் விவரங்கள் பின்வருமாறு மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் 24 மாற்றுத்திறனாளிகளுக்கு தலா ரூ.2,780/ வீதம் மொத்தம் ரூ.66,720/ மதிப்பீட்டிலானகாதொலி கருவிகளையும், 12 பயனாளிகளுக்கு தலா ரூ.17,000/ வீதம் மொத்தம் ரூ.2,04,000/ மதிப்பீட்டிலான இயற்கை மரணத்திற்கான உதவித்தொகைக்கான ஆணைகளையும், மாவட்ட தொழிலாளர் நலத்துறையின் சார்பில் 12 பயனாளிகளுக்கு மொத்தம் ரூ.6,00,000/ மதிப்பீட்டிலான பல்வேறு வகையான உதவித்தொகைக்கான ஆணைகளையும் என ஆக மொத்தம் 48 பயனாளிகளுக்கு ரூ.8,70,720/ மதிப்பீட்டிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் ஆஷா அஜித் வழங்கினார்.

# கடலூர் மாவட்டத்தில் பொதுமக்கள் குறைதீர்வு கூட்டம்: மாவட்ட கலெக்டர் தலைமையில் நடைபெற்றது



கடலூர், செப். 17

கடலூர் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் பொதுமக்கள் குறைகேட்பு நாள்கூட்டம் அனைத்துத் துறை அலுவலர்களுடன் மாவட்ட கலெக்டர் சிபி ஆதித்யா செந்தில் குமார் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் குடும்ப அட்டை, முதியோர் உதவித்தொகை, மாற்றுதிறனாளிகள் உதவித் தொகை, பட்டா போன்ற பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மனுக்களை பொதுமக்கள் மாவட்ட கலெக்டரிடம் நேரில் அளித்தனர்.

இன்று நடைபெற்ற குறைதீர்வு கூட்டத்தில் இலவச பட்டா, கலைஞர் மகளிர் உரிமைத் தொகை, ஆக்கிரமிப்பு, முதியோர் உதவித்தொகை, குழந்தைகள் கல்வி உதவித்தொகை, இலவச வீடு, தையல் இயந்திரம் மற்றும் வேலைவாய்ப்பு தொடர்பாக மொத்தம் 325 மனுக்கள் வரப்பெற்றன. பொதுமக்கள் அளித்த மனுக்களை தீர ஆராய்ந்தும், களஆய்வு செய்தும், விதிமுறைகளுக்குட்பட்டும் துரிதமாக நடவடிக்கை மேற்கொண்டு மனுதாரருக்கு தீர்வு வழங்க வேண்டும், மேலும் உதவித் தொகை, கழிப்பறை, வீடு உள்ளிட்ட அடிப்படை வசதிகள் குறித்தான மனுக்களை உடனடியாக பரிசீலனை செய்து தீர்வு காணவேண்டும். பொதுமக்களின் குறைதீர்ப்பது தான் நம்முடைய தலையாய கடமையாகும். அவ்வாறு அளிக்கும் மனுக்கள் மீது காலம் தாழ்த்தாமல் அரசு விதிமுறைகளுக்கு உட்பட்டு விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என மாவட்ட கலெக்டர் அலுவலர்களுக்கு உத்தரவிட்டார். மேலும் இக்கூட்டத்தில் அனைத்து துறை அலுவலர்களுக்கும் துறை ரீதியாக மேஜைகள் அமைக்கப்பட்டு, பொதுமக்கள் அளித்த மனுக்கள் மீது சம்மந்தப்பட்ட துறை மூலம் உடனடியாக விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

இக்குறைதீர்வு கூட்டத்தின் வாயிலாக வருவாய்த்துறை சார்பில் விருத்தாசலம் வட்டம், பூந்தோட்டம், பேரளையூர், கருவேப்பிலங்குறிச்சி ஆகிய கிராமங்களுக்குட்பட்ட 23 பழங்குடியின மக்களுக்கு மாவட்ட கலெக்டர் சிபி ஆதித்யா செந்தில்குமார் இலவச மனை பட்டாவிற்கான ஆணையை வழங்கினார்.

# காந்தலவாடி ஊராட்சியில் பேரறிஞர் அண்ணா பிறந்தநாளை கொண்டாடினர்



கள்ளக்குறிச்சி.செப்.17

கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டம் திருவெண்ணைய்நல்லூர் கிழக்கு ஒன்றிய திமுக சார்பில் பேரறிஞர் அண்ணா அவர்களின் 116 வது பிறந்த நாளை முன்னிட்டு காந்தலவாடி ஊராட்சியில் கிளை செயலாளர் ஸ்ரீதர், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர்M .ராஜா தலைமையில் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் சிறப்பு அழைப்பாளராக ஒன்றிய கழகச் செயலாளரும் மாவட்ட கவுன்சிலருமான, மா, சந்திரசேகரன் கலந்து கொண்டு அண்ணாவின் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து பள்ளி மாணவர்களுக்கு அன்னதானம் மற்றும் இனிப்புகள் வழங்கினார்.

# திருப்பூரில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்: மாவட்ட கலெக்டர் தலைமையில் நடைபெற்றது



திருப்பூர், செப். 17

மாவட்ட கலெக்டர் தா.கிறிஸ்துராஜ் தலைமையில் திருப்பூர் மாவட்ட ஆட்சியரக அலுவலக கூட்டரங்கில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது.

ஒவ்வொரு வாரமும் திங்கள் கிழமைகளில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெறும் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து பல்வேறு கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டு அவை அனைத்தும் தொடர்புடைய துறை அலுவலர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு உரிய தீர்வு காணப்பட்டு வருகிறது.

அந்த வகையில், இன்றைய தினம் நடைபெற்ற மக்கள் குறைதீர்ப்பு நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து வீட்டுமனை பட்டா மற்றும் முதியோர் உதவித்தொகை, புதிய குடும்ப அட்டை வேண்டியும், சாலை வசதி, குடிநீர் வசதி வேண்டியும் என பல்வேறு கோரிக்கைகள் தொடர்பாக 263 மனுக்களை பெற்றுக் கொண்டதுடன் மனுதாரர்கள் முன்னிலையிலேயே விசாரனை செய்து அதன் மீது உரிய நடவடிக்கையினை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு மாவட்ட கலெக்டர் தா.கிறிஸ்துராஜ் அறிவுறுத்தினார்கள்.

அதனைத் தொடர்ந்து, சமூக நீதிநாளை முன்னிட்டு மாவட்ட கலெக்டர் தா.கிறிஸ்துராஜ் தலைமையில் பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்ற அன்பு நெறியையும், யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற பண்பு நெறியையும் எனது வாழ்வியல் வழிமுறைகளாகக் கடைப்பிடிப்பேன். சுயமரியாதை ஆளுமைத் திறனும் பகுத்தறிவுப் பார்வையும் கொண்டவையாக என்னுடைய செயல்பாடுகள் அமையும், சமத்துவம், சகோதரத்துவம், சமதர்மம் ஆகிய கொள்கைகளுக்காக என்னை ஒப்படைத்துக் கொள்வேன், மானுடத்தின் மீது பற்றையும் மனிதாபிமானத்தையும் என்றும் போற்றுவேன். சமூக நீதியையே அடித்தளமாகக் கொண்ட சமுதாயம் அமைத்திட இந்த நாளில் உறுதியேற்கிறேன் என அனைத்துத்துறை அலுவலர்கள் முன்னிலையில் உறுதிமொழி ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் க.கார்த்திகேயன், தனித்துணை ஆட்சியர் குமாரராஜா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) (பொ) ஜெயராமன், திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்) சாம்சாந்தகுமார், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் செல்வி, துணை ஆட்சியர்கள் மற்றும் அனைத்து அரசுத் துறைகளின் அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# பருகம்பட்டு கிராமத்தில் நீர்நிலை புறம்போக்கில் இருந்த மாதா கோவிலை இடித்த பொதுப்பணித்துறையினர்



விழுப்புரம், செப். 17

விழுப்புரம் மாவட்டம் திருவெண்ணெய்நல்லூர் அடுத்த பருகப்பட்டு கிராமத்தில் கடலூர் திருக்கோவிலூர் செல்லும் சாலை ஓரத்தில் நீர்நிலை புறம் போக்குஅதேகிராமத்தைச் சேர்ந்த கிறிஸ்துவ மதத்தினர் மாதா ஆலயத்தை ஒன்று கூடி வழிபாடு செய்து வந்தனர்.இதை அறிந்த பொதுப்பணித் துறை அதிகாரிகள் விதிகளை மீறி நீர் செல்லும் பாதையில் மாதா ஆலயம் கட்டப்பட்டுள்ளதாக உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. இந்த வழக்கை விசாரித்த நீதிமன்றம் மாதா ஆலயத்தை இடித்து அப்புறப்படுத்த வேண்டும் என உத்தரவிட்டது,

இதைத்தொடர்ந்து தானாக முன்வந்து அகற்ற மாதா ஆலயத்தின் நிர்வாகிகளுக்கு அறிவுரை வழங்கியும் அதை ஏற்க மறுத்த அவர்கள் மாதா ஆலயத்தைஇடிக்காமல்காலம் தாழ்த்தி வந்ததால் நீதிமன்றம் நீதிமன்ற உத்தரவுப்படி பொதுப்பணித்துறை அதிகாரிகள் உதவியுடன் 100 க்கும் மேற்பட்ட போலீசார் குவிக்கப்பட்டு ஜேசிபி இயந்திரம் மூலம் மாதா ஆலயத்தை இடித்து அப்புறப்படுத்தினர்.

முன்னதாக இடிக்க வந்த போலீசார் மற்றும் அதிகாரிகளை கண்டித்து மாதா ஆலயத்தை இடிக்க விடாமல் நூற்றுக்கும் மேற்பட்டோர் ஆலயத்தின் முன்பு என்றும் ஆலயத்தின் மேலே ஏறி தங்களது எதிர்ப்புகளை தெரிவித்து இடித்து விடாமல் செய்ததால் அவர்களை கைது செய்து அழைத்து சென்றனர் போலீசார்,

இந்த சம்பவத்தால் அங்கு பரபரப்பு ஏற்பட்டு உள்ளது,

# இராமநாதபுரத்தில் முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டிகளில் மாற்றுத்திறனாளிகளுக்கான விளையாட்டுப் போட்டியின் துவக்கவிழா நிகழ்ச்சி



இராமநாதபுரம், செப்.17

இராமநாதபுரம் சீதக்காதி சேதுபதி விளையாட்டு மைதானத்தில் முதலமைச்சர் கோப்பை 2024க்கான விளையாட்டுப் போட்டிகளில் மாற்றுத்திறனாளி களுக்கான விளையாட்டுப் போட்டியின் துவக்கவிழா நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட கலெக்டர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் தலைமையேற்று மாற்றுத்திறனாளிகளுக்கான விளையாட்டு போட்டிகளை துவக்கி வைத்து பார்வையிட்டார்.

இப்போட்டியில் பங்கேற்றிடும் வகையில் மாவட்ட அளவில் 350க்கும் மேற்பட்ட மாற்றுத்திறனாளிகள் பதிவு செய்து வருகை தந்திருந்தனர். இதில் புப்பந்தாட்டம் கையுந்துப்பந்து கால்பந்து சக்கர நாற்காலியுடன் ஓட்டப்பந்தயம் மற்றும் 100மீருபவ் 400மீ ஓட்டம் உள்ளிட்ட 10க்கும் மேற்பட்ட போட்டிகள் நடைபெற்றது. ஒவ்வொரு போட்டியிலும் முதல் 3 இடங்களைப் பெறக்கூடியவர்களுக்கு முதலமைச்சர் கோப்பைக்கான பரிசுத்தொகை அவர்களது வங்கி கணக்கில் வரவு வைக்கப்படுவதுடன் பாராட்டுச்சான்று வழங்கி சிறப்பிக்கப்படும். மேலும் மாவட்ட அளவில் வெற்றி பெறும் வீரர்கள் மாநில அளவில் நடைபெறும் முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டியில் பங்கேற்க அழைத்துச் செல்லப்படுவார்கள். இப்போட்டிகளில் பங்கேற்றுள்ள அனைவரும் சிறந்த முறையில் வெற்றி பெற்றிட வேண்டுமென செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில் உதவி ஆட்சியர் (பயிற்சி) முகமது இர்பான் மாவட்ட விளையாட்டு அலுவலர் தினேஷ்குமார் பயிற்சியாளர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் கூடுதல் மோட்டார் வாகன ஆய்வாளரை நியமனம் செய்ய வேண்டும்: ஓட்டுனர் பயிற்சி பள்ளிகள் சார்பாக மனு



நெல்லை,செப்.17

திருநெல்வேலி வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் கூடுதலாக மோட்டார் வாகன ஆய்வாளர் நியமனம் செய்ய கேட்டு அனைத்து பொதுமக்கள் சார்பாகவும் திருநெல்வேலி ஓட்டுநர் பயிற்சி பள்ளிகள் சார்பாகவும் நெல்லை கலெக்டர் அலுவலகத்தில் தலைவர் டொமினிக் ஆண்டனி செயலாளர் கண்ணன் சட்ட ஆலோசகர் சதீஷ்குமார் ஆகியோர் நெல்லை அலுவலகத்தில் மனு கொடுத்தனர். மனுவில் அரசு வழிகாட்டுதல் படி அமையப்பட்ட நேரமான பழகுநர் உரிமம் தேர்வு காலை 9 மணிக்கும், ஓட்டுநர் உரிமம் தேர்வு காலை 10 மணிக்கும் நடத்திட வழிவகை செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது.

மேலும் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் பணிகளை மேம்படுத்தும் பொருட்டும் சாலை பாதுகாப்பு உறுதி செய்யவும் அதன் மூலம் விபத்துகளை குறைக்கவும் வட்டார போக்குவரத்து அலுவலர்கள் மற்றும் ஓட்டுநர் பயிற்சி பள்ளி நிர்வாகிகள் பொதுமக்கள் அடங்கிய மாதாந்திர ஆலோசனை கூட்டங்கள் நடத்திட ஆவன செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது இவ்வாறு அந்த மனுவில் கூறப்பட்டிருந்தது.

# மாமல்லபுரம் மல்லிகேஸ்வரர் கோவில் கும்பாபிஷேகம் ஏராளமான பக்தர்கள் பங்கேற்பு

மாமல்லபுரம், செப். 17

மாமல்லபுரத்தில் உள்ள மல்லிகேஸ்வரர் கோவில் புதுப்பிக்கப்பட்டு அதன் கோபுர விமானம் மற்றும் மூலவருக்கு இன்று காலை 7:50க்கு கலசத்தில் புனித நீர் ஊற்றப்பட்டு, மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. முற்றிலும் கருங்கல்லினால் கட்டப்பட்ட புதிய ராஜகோபுரம் நிர்மானம் செய்யப்பட்டு அதன் விமானத்திலும் புனித நீர் ஊற்றப்பட்டது.

கடந்த வியாழக்கிழமை முதல் கணபதி ஹோமத்துடன் பல்வேறு வேல்விகள் நடத்தப்பட்டது. இந்து



சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் உள்ள இந்த கோவில், 7ம் நூற்றாண்டில் பல்லவ மன்னர்கள் மாமல்லபுரத்தை துறைமுகமாக ஆட்சி செய்தபோது மன்னரின் அரசவையில் அமைச்சராக இருந்த பரஞ்சோதி என்பவரால் கட்டப்பட்ட பழமையான கோவிலாகும்.

13 ஆண்டுகளுக்கு பிறகு இன்று நடைபெற்ற இந்த மகா கும்பாபிஷேகத்தில் மாமல்லபுரம் சுற்றுவட்டார பகுதிகளை சேர்ந்த பொது மக்கள் ஏராளமானோர் பங்கேற்று மல்லிகேஸ்வரரை தரிசனம் செய்தனர். விழா ஏற்பாடுகளை இந்து சமய அறநிலையத்துறை அதிகாரிகள் மற்றும் நந்திகேஸ்வரர் பிரதோஷ கமிட்டியினர் கோவில் நிர்வாகிகள் ஏற்பாடு செய்திருந்தனர். கும்பாபிஷேக விழாவில் பங்கேற்ற பக்தர்களுக்கு அன்னதானம், இனிப்புகள் வழங்கபட்டது.

# வைகை அணையில் இருந்து தண்ணீர் திறப்பு

ஆண்டிபட்டி, செப். 17

தேனி மாவட்டம் ஆண்டிபட்டி அருகே உள்ள 71 அடி உயரமுள்ள வைகை அணையில் இருந்து கடந்த ஜூன் மாதம் முதல் மதுரை, திண்டுக்கல் மாவட்ட முதல் போக பாசனத்துக்காக கால்வாய் மூலம் தண்ணீர் திறக்கப்பட்டு வந்தது.

தற்போது அணையில் 62 அடிக்கு தண்ணீர் இருப்பதால் மதுரை, திண்டுக்கல், சிவகங்கை மாவட்டத்தில் ஒரு போக பாசனத்துக்கு இன்று முதல் தண்ணீர் திறக்க தமிழக அரசு உத்தரவிட்டது.

திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டை தாலுகாவில் 1797 ஏக்கர், மதுரை மாவட்டம் வாடிப்பட்டி தாலுகாவில் 16452 ஏக்கர், மதுரை வடக்கு தாலுகாவில் 26792 ஏக்கர் என மொத்தம் 4541 ஏக்கர் நிலங்கள் பெரியாறு பிரதான கால்வாய் பாசன பகுதியின் கீழ் இரு போக பாசன நிலங்களாக உள்ளன.

இந்த நிலங்களுக்கு முதல் போக பாசனத்துக்காக திறக்



கப்பட்ட 900 கன அடி நீர் 45 நாட்களுக்கு முழுமையாகவும், 75 நாட்களுக்கு முறை வைத்தும் 120 நாட்கள் திறக்கப்பட்ட நிலையில் நேற்று காலை முதல் அந்த தண்ணீர் நிறுத்தப்பட்டது.

இதனையடுத்து இன்று காலை முதல் வைகை அணையில் இருந்து மதுரை, திண்டுக்கல், சிவகங்கை மாவட்ட ஒரு போக பாசனத்துக்காக 1130 கன அடி தண்ணீர் திறக்கப்பட்டது. இந்த தண்ணீரின் மூலம் திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள நிலக்கோட்டை, மதுரை மாவட்டத்தில் உள்ள வாடிப்பட்டி, மேலூர், மதுரை வடக்கு, திருமங்கலம், சிவகங்கை மாவட்டத்தில் திருப்பத்தூர் மற்றும் சிவகங்கை ஆகிய பகுதிகளில் சுமார் 1 லட்சத்து 5 ஆயிரத்து 2 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும்.

இந்த தண்ணீர் 45 நாட்களுக்கு முழுமையாகவும், 75 நாட்களுக்கு முறை வைத்தும் என 120 நாட்களுக்கு 8461 மில்லியன் கன அடி நீர் திறக்கப்படும் என்று பொதுப்பணித்துறையினர் தெரிவித்துள்ளனர். வைகை அணையில் இருந்து கூடுதல் தண்ணீர் திறக்கப்படஉள்ளதால் நீர்மட்டம் குறைவதை ஈடுசெய்யும் வகையில் பெரியாறு அணையில் இருந்து கூடுதல் தண்ணீர் வைகை அணைக்கு திறக்கப்படும் என்றும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இன்று காலை நிலவரப்படி வைகை அணையின் நீர்மட்டம் 61.48 அடியாக உள்ளது. அணைக்கு நீர்வரத்து 561 கன அடி வருகிறது. பாசனத்துக்கு 1130 கன அடி மற்றும் மதுரை மாநகர குடிநீருக்கு 69 என மொத்தம் 1199 கன அடி நீர் திறக்கப்படுகிறது. நீர்இருப்பு 3892 மி.கன அடியாக உள்ளது.


பெரியாறு அணையின் நீர்மட்டம் 131.95 அடியாக உள்ளது. வரத்து 767 கன அடி. திறப்பு 900 கன அடி. இருப்பு 5153 மி.கன அடி. மஞ்சளாறு அணையின் நீர்மட்டம் 55 அடியாகவும், சோத்துப்பாறை அணையின் நீர்மட்டம் 122.18 அடியாகவும் உள்ளது.

# செங்கோட்டை அருகே குளத்தில் குதூகலமாய் குளியலிட்டு மகிழும் காட்டு யானைகள்

செங்கோட்டை, செப். 17

மேற்கு தொடர்ச்சி மலை பகுதியையொட்டி உள்ள விவசாய நிலங்களில் அவ்வப்போது வன விலங்குகள் புகுந்து விவசாய பயிர்களை சேதப்படுத்துவதும், அந்த வனவிலங்குகளை விரட்டும் முயற்சியில் வனத்துறையினர் ஈடுபடுவதும் தொடர் கதையாகி வருகிறது.

இந்நிலையில் கடந்த சில வாரங்களாக செங்கோட்டையை அடுத்துள்ள மேக்கரை, பண்பொழி, வடகரை உள்ளிட்ட பகுதிகளில் யானைகள் முகாமிட்டு மேற்கு தொடர்ச்சி மலையையொட்டி அமைந்துள்ள விவசாய நிலங்களில் கீழே இறங்கி



பயிர்களை நாசப்படுத்தி வருகின்றன.

கடந்த சில நாட்களாக செங்கோட்டையை அடுத்த பண்பொழி பகுதியில் யானை கூட்டம் விவசாய நிலங்களை சேதப்படுத்திக் கொண்டிருந்த நிலையில், அதனை விரட்டும் முயற்சியில் வனத்துறையினர் மற்றும் விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

நேற்று நள்ளிரவில் 2 யானைகள் மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் இருந்து கீழே இறங்கி எந்தவிதமான அச்சமும் இன்றி சாதாரணமாக மீண்டும் வயல்களுக்குள் புகுந்தது.

தொடர்ந்து இன்று காலை அந்த 2 யானைகளும் அந்த பகுதியில் உள்ள ஒரு குளத்திற்கு சென்று ஆனந்த குளியலிட்டு மகிழ்ந்தன. அவை குளத்தில் குளித்த காட்சிகள் தற்போது சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.

சமீப காலமாக பொது மக்கள் அதிகம் வசித்து வரும் ஊர் பகுதிக்குள் காட்டு யானை கூட்டம் புகுந்து விவசாய நிலங்களை சேதப்படுத்தி வரும் நிலையில், அவற்றால் பொதுமக்களுக்கு எந்தவிதமான பாதிப்பும் ஏற்படுவதற்கு முன்னர் தேவையான பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை வனத் துறையினர் மேற்கொள்ளவேண்டும் என அப்பகுதியை சேர்ந்த பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# இராமநாதபுரத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பவள விழாவை முன்னிட்டு கழகத் தலைவர் ஆணைக்கினங்க இல்லம் தோறும் கழகக் கொடியை ஏற்றும் நிகழ்வு

இராமநாதபுரம், செப்17

இராமநாதபுரத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பவள விழாவை முன்னிட்டு கழகத் தலைவர் ஆணைக்கினங்க இல்லம் தோறும் கழகக் கொடியை ஏற்றும் நிகழ்வாக திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாநில மாணவர் அணி தலைவர் வழக்கறிஞர் ராஜீவ் காந்தி அவர்கள் அவருடைய சொந்த கிராமமான தேர்போகியில் அமைந்துள்ள அவருடைய இல்லத்தில் கழகக் கொடியினை ஏற்றினார்.

மேலும் மாநில சுயாட்சி குறித்தான விவாதங்கள் நடக்கிற இந்த சூழலில் பேறறிஞர் அண்ணாவுடைய விவாதமும் அவருடைய அரசியல்தான் பல்வேறு மாநிலங்களுக்கு வழிகாட்டியாக இருக்கிறது. இன்று கடைபிடிக்கப்படும் இரு மொழிக் கொள்கை ,மாநில உரிமை, சமய சார்பற்ற கொள்கை மொழிப்பற்று, இனப்பற்று, சமூக நீதி இதற்கெல்லாம் விதையை தூவியவர் பேரறிஞர் அண்ணாதான். தமிழ்நாட்டிற்கு தமிழ்நாடு என பெயரிட்டு தமிழ் உணர்வை ஊட்டியதோடு மட்டுமல்லாமல் கழக உடன்பிறப்புகளுக்கும் தமிழ்நாட்டு மக்களுக்கும் எப்போதும் மூத்தவராக பேரறிஞர் அண்ணா திகழ்கிறார் பேரறிஞர் அண்ணா அவர்கள் கட்சி, சாதி மதம் , மொழி ஏன் ? இனம் தாண்டியே கொண்டாடப்படுகிற மகத்தான மனிதர் ஆவர். அண்ணா என்பது தனிப்பட்ட மனிதர் அல்ல மாறாக மனித தத்துவம் அந்த தத்துவத்தை இந்த மண்ணில் விதைப்போம் மதச்சார்பற்ற சமய சார்பற்ற மொழிப்பற்று கொண்ட ,இனப்பற்று கொண்ட ஒரு புது சமூகத்தை படைப்பதற்கு என்றும் உறுதி ஏற்போம்,

இந்நிகழ்வில் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த, . மண்டபம் மத்திய ஒன்றிய செயலாளர் முத்துக்குமார் மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் காயாம்பு, சுற்றுச்சூழல் மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் பத்மநாதன், விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் சக்திவேல், ஆர்.எஸ் மங்கலம் தெற்கு ஒன்றிய மாணவரணி அமைப்பாளர் ஹரி கிருஷ்ணன், பொறியாளர் அணி துணை அமைப்பாளர் கண்ணதாசன், மாவட் தொண்டரணி துணை அமைப்பாளர் மீரான், ,நாகூர் கனி,ராஜா, சித்தார் கோட்டை,கிளைச் செயலாளர் முகமது சாகுல் ஹமீது, சமத்துவபுரம் முனியாண்டி , இலந்தை கூட்டம் முனியசாமி அகமது உஷாலுதீன், ரஹமத் அலி, பனைக்குளம் ஜஹாங்கீர், நூருல் மன்னா, தேர்போகி கே.ஆர் மங்களநாதன். முத்துராமலிங்கம், மாடசாமி கோவில் செந்தில்,கர்ணன், முத்துப் பாண்டி மற்றும் புதுவலசை ஜவாஹிருல்லா, அத்தியூத்து பனைக்குளம், அழகன்குளம் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த கட்சி நிர்வாகிகளும் திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தனர், தேர்போகி பாண்டி நன்றி கூறினார்.

# குற்றாலம் அருவிகளில் அலைமோதிய சுற்றுலா பயணிகள் கூட்டம்



தென்காசி, செப். 17

குற்றாலத்தில் சீசன் முடிவடைந்த நிலையிலும் அருவிகளில் சீராக தண்ணீர் விழுந்து வருவதால் தொடர்ந்து சுற்றுலா பயணிகள் குற்றால அருவிகளில் குளிப்பதற்கு ஆர்வம் காட்டி வருகின்றனர்.

விடுமுறை தினம் என்பதால் காலை முதலே உள்ளூர் சுற்றுலா பயணிகள் மட்டுமின்றி வெளியூர் மற்றும் அண்டை மாநிலமான கேரளாவில் ஓணம் பண்டிகை கொண்டாடுவதை முன்னிட்டு ஓணம் விடுமுறை என்பதாலும் அங்கிருந்தும் சுற்றுலா பயணிகள் குற்றால அருவிகளில் குளிக்க முகாமிட்டுள்ளனர். புலி அருவி, ஐந்தருவியில் அதிக அளவில் கூட்டம் அலைமோதியது. மெயின் அருவி பகுதியில் அமைந்துள்ள செல்பிபாய்ண்டில் புகைப்படம் எடுத்து குடும்பமாக வந்த சுற்றுலா பயணிகள் உற்சாகமடைந்தனர். அருவிக்கரை பகுதியில் இருக்கும் கடைகளிலும் கூட்டம் அலைமோதியது.

# தி.மு.க. நிர்வாகி கொலையில் அண்ணன் கைது

திருச்சி, செப். 17

திருச்சி கீழதேவதானம் பகுதியை சேர்ந்தவர் பாண்டியராஜன். இவருடை மகன்கள் ரமேஷ் (50), பிருத்விராஜ் (48). திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழுவில் துணை அமைப்பாளராக பிருத்விராஜ் பொறுப்பு வகித்து வந்தார். பிருத்விராஜூக்கு இன்னும் திருமணம் ஆகவில்லை.

கடந்த 2016ம் ஆண்டு அறிவிக்கப்பட்ட உள்ளாட்சி தேர்தலில் கவுன்சிலர் பதவிக்கு பிருத்விராஜ் வேட்பாளராக அறிவிக்கப்பட்டார். ஆனால் அந்த தேர்தல் ரத்து ஆனதுடன், மீண்டும் நடந்த தேர்தலில் அந்த வார்டு பெண்களுக்கு ஒதுக்கப்பட்டதால் அவருக்கு வாய்ப்பு கிடைக்கவில்லை.

இந்தநிலையில் நேற்று காலை அண்ணன்தம்பிக்கு இடையே வாய்த்தகராறு ஏற்பட்டது. அக்கம் பக்கத்தினர் அவர்களை சமரசம் செய்து அனுப்பி வைத்தனர். பின்னர் பிற்பகலில் வீட்டின் 3வது மாடியில் உள்ள தனி அறையில் அண்ணன், தம்பி 2 பேரும் சவுந்தர் என்பவருடன் சேர்ந்து மது அருந்தினர்.

அப்போது, அவர்களுக்குள் மீண்டும் தகராறு ஏற்பட்டது. சிறிது நேரத்தில் ரமேசும் அவருடைய நண்பர் சவுந்தரும் வீட்டை விட்டு சென்றுவிட்டனர். மாலையில் நீண்ட நேரமாகியும் பிருத்விராஜ் கீழே வராததால் சந்தேகம் அடைந்த உறவினர்கள் மாடிக்கு சென்று பார்த்தனர்.

அங்கு பிருத்விராஜ் ரத்த வெள்ளத்தில் பிணமாக கிடந்தார். அருகில் உடற்பயிற்சி செய்யும் கர்லா கட்டை ரத்தக்கறையுடன் கிடந்தது. உடனே இது பற்றி கோட்டை போலீசாருக்கு தகவல் கொடுத்தனர். அதன் பேரில் போலீசார் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்து விசாரணை நடத்தினர்.

விசாரணையில், மாடியில் அமர்ந்து 3 பேரும் மது அருந்திய போது, தகராறு ஏற்பட்டது. இதில் தகராறு முற்றவே ஆத்திரம் அடைந்த ரமேஷ் அங்கிருந்த கர்லா கட்டையால் தனது தம்பி பிருத்விராஜை அடித்து கொலை செய்ததும், பின்னர் ரமேசும், சவுந்தரும் அங்கிருந்து தப்பிச்சென்றதும் தெரியவந்தது.

இதைத்தொடர்ந்து பிருத்விராஜின் உடலை கைப்பற்றிய போலீசார் பிரேத பரிசோதனைக்காக திருச்சி அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவைத்தனர். இது குறித்த புகாரின் பேரில் கோட்டை போலீசார் வழக்குப்பதிவு செய்து கொலைக்கான காரணம் குறித்து விசாரித்து வருகிறார்கள். இந்தநிலையில் பிருத்விராஜின் அண்ணனை போலீசார் நேற்று இரவு கைது செய்தனர்.

தேர்தல் தொடர்பான முன் விரோதத்தில் தம்பியை கொலை செய்ததாக கைதான பிருத்விராஜின் அண்ணன் ரமேஷ் பரபரப்பு வாக்கு மூலம் அளித்துள்ளார். தொடர்ந்து போலீசார் அவருடைய நண்பரை தேடி வருகிறார்கள்.

# கஞ்சமலை சித்தர்கோவில் மகா கும்பாபிஷேக விழா

சேலம், செப். 17

சேலம் மாவட்டம் இளம்பிள்ளை அருகே கஞ்சமலை அடிவாரத்தில் சித்தர் கோவில் உள்ளது. இக்கோவிலில் சித்தேசுவரர் சாமி வீற்றிருந்து பக்தர்களுக்கு அருள் பாலித்துவருகிறார். இங்கு மகா கணபதி, வெற்றி விநாயகர், ஞானசற்குரு பாலமுருகன், காளியம்மன் உள்ளிட்ட சன்னதிகள் உள்ளன.

இந்த கோவில் பல ஆயிரம் ஆண்டுகள் பழமையானதாகும்.

மன்னன் அதியமான், அவ்வைக்கு கொடுத்த கருநெல்லி இந்த கஞ்சமலையில் விளைந்ததாகும். இவ்வாறு பிரசித்தி பெற்ற இக்கோவில் இந்து சமய அறநிலைய துறை கட்டுப்



பாட்டில் உள்ளது.

கடந்த 2003ம் ஆண்டு கும்பாபிஷேகம் நடந்தது. இதையடுத்து 21 ஆண்டுகளுக்கு பிறகு இக்கோவில் மகா கும்பாபிஷேக விழா இன்று வெகுவிமரிசையாக நடைபெற்றது.

காலை 4.30 மணிக்கு மேல் திருப்பள்ளி எழுச்சி, தமிழ்திருமுறை பாராயணம், காலை 7 மணிக்கு மாகாதீபாராதனை, யாக சாலையில் இருந்து திருவருள், திருக்குடங்கள் புறப்பாடு, காலை, 6.30 மணிக்கு மேல் 7.30 மணிக்குள் மூலஸ்தான, ராஜ கோபுர கும்பாபிஷேகம், காலை 7.30 மணிக்கு மேல் 8 மணிக்குள் பால முருகன் கோவில் கும்பாபிஷேகம், காலை, 7.35 மணிக்கு மேல் 8.15 மணிக்குள் காளியம்மனுக்கு கும்பாபிஷேகம், காலை 9 மணிக்கு மேல் 10.45 மணிக்குள் கஞ்சமலை சித்தேஸ்வரசாமிக்கு மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. இதில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் பங்கேற்றனர். விழாவையொட்டி பலத்த போலீஸ் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது. 750க்கும்மேற்பட்ட போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர். கண்காணிப்பு காமிராக்கள் பொருத்தப்பட்டு கண்காணி க்கப்பட்டன. மேலும் சாதாரண உடையிலும் போலீசாரும் கண்காணி த்தனர். பக்தர்கள் வசதிக்காக சிறப்பு பஸ்கள் இயக்கப்பட்டது.

# திருவந்திபுரம் தேவநாதசுவாமி கோவிலில் ஒரே நாளில் 100 திருமணங்கள்

கடலூர், செப். 17

கடலூர் அருகே திருவந்திபுரம் தேவநாத சுவாமி கோவில் 108 வைணவ தலங்களில் முதன்மை பெற்றதாகும். மேலும் பிராத்தனை செய்து கொண்டவர்கள் இங்கு திருமணம் செய்து கொண்டு தேவநாதசாமியை தரிசித்து சென்று வருகின்றனர்.

திருவந்திபுரம் தேவநாத சுவாமி கோவில் முன்பு உள்ள மலையில் முகூர்த்த நாட்களில் அதிக அளவில் திருமணம் நடைபெற்று வருவதால் கூட்ட நெரிசல் அதிகரித்து வந்தது. இதனால் இந்து சமய அறநிலைத்துறை சார்பில் திருவந்திபுரத்தில் புதிதாக



திருமண மண்டபம் கட்டும் பணி நடைபெற்று வருகின்றது.

இந்த நிலையில் நாளையுடன் ஆவணி மாதம் முடிந்து நாளை மறுநாள் புரட்டாசி மாதம் தொடங்குவதால் தேவநாத சுவாமி கோவிலில் அதிகாலை 4 மணி முதல் திருமணங்கள் நடைபெறத் தொடங்கியது. இதனை தொடர்ந்து திருவந்திபுரம் ஊர் பகுதியில் ஏராளமான வாகனங்கள் அணிவகுத்து நின்றிருந்தன. மேலும் திருமண ஜோடிகள் திருவந்திபுரம் முகப்பு பகுதியில் இருந்து கோவிலுக்கு நடந்து சென்றனர்.

கோவில் திருமண மண்டபத்தில் 75 திருமண ங்களும், அப்பகுதியில் உள்ள தனியார் மண்டபத்தில் சுமார் 25 திருமணங்கள் என 100 திருமணம் நடைபெற்றது குறிப்பிடத்த க்கதாகும். இதனால் பொது மக்கள் அதிகளவில் குவிந்ததால் கடலூர்பாலூர் சாலையில் காலை முதல் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. இதனைத் தொடர்ந்து கடலூர் திருப்பாதிரிப்புலியூர் போலீசார் அதிகாலை முதல் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வந்தனர்.

# வீட்டின் பூட்டை உடைத்து 16 பவுன் நகைகள், ரூ.25 லட்சம் கொள்ளை

கரூர், செப். 17

கரூர் மாவட்டம் வாங்கல் காவல் நிலைய சரகம் எல்லை மேடு அருகே உள்ள காவிரிநகரை சேர்ந்தவர் பவுன்ராஜ் (31). இவர் கரூரில் பைனான்ஸ் தொழில் செய்து வருகிறார். சம்பவத்தன்று இவர் வீட்டை பூட்டிவிட்டு கரூருக்கு சென்றிருந்தார். வீட்டுக்கு வந்து பார்த்தபோது வீட்டில் வலது பக்க கதவு உடைக்கப்பட்டு கிடந்ததை பார்த்து அதிர்ச்சி அடைந்தார். உள்ளே சென்று பார்த்தபோது லாக்கர் உடைக்கப்பட்டு அதில் இருந்த ரூ.25 லட்சம் ரொக்க பணம் மற்றும் 16 பவுன் தங்க நகைகள் கொள்ளை போயின. இதுபற்றி பவுன்ராஜ் வெங்கமேடு போலீஸ் நிலையத்தி ல் புகார் செய்தார். இன்ஸ்பெக்டர் செந்




தூர்பாண்டியன் மற்றும் போலீசார் சம்பவ இடத்துக்கு சென்று விசாரணை நடத்தினர். தடயவியல் நிபுணர்களும் வந்து தடயங்களை பதிவு செய்தார்கள்.

அப்பகுதியில் கண்காணிப்பு கேமரக்களில் கொள்ளையர் உருவம் பதிவாகி உள்ளதா என்றும் ஆய்வு செய்யப்பட்டன. இது தொடர்பாக போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

# திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலில் குவிந்த பக்தர்கள்

திருச்செந்தூர், செப். 17
முருகப் பெருமானின் அறுபடை வீடுகளில் 2ம் படை வீடான திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவில் சிறந்த பரிகார தலமாக விளங்கி வருகிறது. இங்கு நாள்தோறும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் சாமி தரிசனம் செய்து வருகின்றனர்.

இந்த நிலையில் தொடர் விடுமுறை நாள் என்பதால் ஏராளமான பக்தர்கள் இன்று அதிகாலையில் இருந்தே கடல் மற்றும் நாழி கிணறு புனித தீர்த்தத்தில் நீராடி நீண்ட வரிசையில் காத்திருந்து சாமி தரிசனம் செய்தனர்.


விடுமுறை நாட்களில் ஏராளமானகூட்டம்அலைமோதுவது வழக்கம். அந்த வகையில் இன்று ஞாயிற்றுக்கிழமை என்பதாலும், முகூர்த்த நாள் என்பதாலும் வழக்கத்தை விட கூட்டம் அதிகமாக காணப்பட்டது.

அதனால் தரிசனம் செய்ய வந்த பக்தர்கள் 5 மணி நேரம் நீண்ட வரிசையில் காத்திருந்து தரிசனம் செய்தனர்.

வழக்கம் போல் அதிகாலை 4 மணிக்கு கோவில் நடை திறக்கப்பட்டது. 4.30 விஸ்வரூப தரிசனம், 6 மணிக்கு உதய மார்த்தாண்ட அபிஷேகம், தொடர்ந்து மற்ற கால பூஜைகள் நடந்தது.

பக்தர்கள் கூட்டம் அதிகரித்ததால் பக்தர்கள் வந்த வாகன நெருக்கடியால் போக்குவரத்து ஸ்தம்பித்தது. ஆனாலும் போக்குவரத்து போலீசார் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படாதவாறு சரி செய்தனர்.

# பெண்கள் கை காட்டியும் அரசு பஸ்சை நிறுத்தாமல் சென்ற டிரைவர், கண்டக்டர் சஸ்பெண்ட்



குமரி, செப். 17
நாகர்கோவில் வடசேரியில் இருந்து சுசீந்திரம், அழகப்பபுரம் வழியாக நெல்லை மாவட்டம் கூட்டப்புளிக்கு கடந்த 13ந் தேதி மாலையில் ஒரு அரசு பஸ் புறப்பட்டது. அந்த பஸ் அழகப்பபுரம் சென்றபோது அங்குள்ள பஸ் நிறுத்தத்தில் நின்று கொண்டிருந்த 2 பெண்கள் பஸ்சை நிறுத்தும்படி கை காட்டினர். ஆனால் பஸ் நிற்கவில்லை.

இதைப் பார்த்த சில வாலிபர்கள் நிற்காமல் சென்ற அரசு பஸ்சை மோட்டார் சைக்கிளில் பின் தொடர்ந்து சென்று வழிமறித்தனர். பின்னர் அந்த வாலிபர்கள் பஸ்சில் இருந்த டிரைவர் மற்றும் கண்டக்டரிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். அப்போது டிரைவர் தெரியாமல் தவறு செய்து விட்டதாக தெரிவித்தார். இதையடுத்து டிரைவர் அங்கிருந்து பஸ்சை ஓட்டி சென்றார்.

தற்போது டிரைவரிடம் வாலிபர்கள் வாக்குவாதத்தில் ஈடுபட்ட வீடியோ சமூக வலைத்தளங்களில் வைரலாக பரவி பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. இது தொடர்பாக விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்க அரசு போக்குவரத்துக் கழக அதிகாரிகள் உத்தரவிட்டனர். இதையடுத்து பெண்கள் கைகாட்டியும் பஸ்சை நிறுத்தாமல் சென்ற டிரைவர் ஸ்டீபன் மற்றும் கண்டக்டர் மணிகண்டன் ஆகியோரை நாகர்கோவில் மண்டல அரசு போக்குவரத்து கழக பொது மேலாளர் மெர்லின் ஜெயந்தி பணியிடை நீக்கம் செய்து உத்தரவிட்டுள்ளார்.

# குன்னூர் அருகே ஜெகதளா பேரூராட்சி சார்பில் நகர்புறபகுதிசபா கூட்டம்




குன்னூர், செப்.17
தமிழக அரசு சார்பில் ஊராட்சிகளை தொடர்ந்து பேரூராட்சி மற்றும் நகராட்சிகளிலும் கிராம சபை கூட்டங்கள் நடத்த வேண்டும் என உத்திராடப்பட்டுள்ளது . அதன்படி பேரூராட்சிகளில் ஆண்டுக்கு நான்கு முறை நடத்த வேண்டும் அதற்கேற்றார் போல் வார்டுகளை பிரித்து நகர்புற பகுதி சபா கூட்டம் நடத்தப்பட வேண்டும் . அதன்படி குன்னூர் அருகே உள்ள ஜெகதளா பேரூராட்சி சார்பில் நேற்று ஒசட்டி கிராமத்தில் நடந்தது . இதில் பேரூராட்சி செயல் அலுவலர் சரவணகுமார் தலைமை வகித்தார் . இந்த பகுதியை சேர்ந்த திமுக மற்றும் அதிமுக என 4 கவுன்சிலர்கள் கலந்து கொண்டனர் . இக்கூட்டத்தில் குறைந்த அளவில்தான் மக்கள் கலந்து கொண்டனர் . இதில் நடைபாதை, குடிநீர் , கழிப்பிடம், சாலை உள்ளிட்ட அடிப்படை வசதிகள் குறித்து பொதுமக்கள் புகார் மனு கொடுத்தனர். இதன் பேரில் விரைவில் நடவடிக்கை எடுப்பதாக தெரிவிக்கப்பட்டது .

இந்நிலையில் பதினோராவது வார்டு பகுதியில் ரூ16 லட்சம் செலவில் பாலம் அமைப்பதற்காக நிதி ஒதுக்கிடப்பட்டு டெண்டரும் விடப்பட்டது . இதற்கான பூமிக்கு பூஜையும் நடந்தது ஆனால் தற்போது அங்கு பாலம் காணவில்லை இங்கு கொடுக்கப்பட்ட நிதியை வேறொரு பகுதிக்கு பயன்படுத்தப்பட்டுள்ளது . இதனால் இப்பகுதி மக்கள் ஏமாற்றம் அடைந்துள்ளனர் எனவும் ஒசட்டி பள்ளம் பகுதியில் நடைபாதை குண்டும், குழியுமாக இருப்பதால் உடல் நலம் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் உயிரிழந்த உடல்களை கூட சுமந்து வர இயலவில்லை என மக்கள் வேதனையுடன் கூறினர் . இது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்தார் . இந்நிலையில் சபா கூட்டத்திற்கு தலைவர் மற்றும் துணைத் தலைவர் ஏன் பங்கேற்கவில்லை அவர்களுக்கு தகவல் கொடுக்கப்படவில்லையா ? பிக்கட்டி பகுதியில் தலைவர் மற்றும் சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரர் இல்லாமலேயே செயல் அலுவலர் மட்டும் சென்று நிழல் குடைக்கு பூஜை செய்தது ஏன் என பொதுமக்கள் கேள்வி எழுப்பினர் .

இதற்கு பதில் அளித்த செயல் அலுவலர் : சபா கூட்டம் தொடர்பாக தலைவரிடம் முறையாக அதிகாரிகள் மூலம் கடிதம் கொடுக்கப்பட்டது . ஆனால் அவர் அதை வாங்க மறுத்து விட்டார் இதனால்தான் இந்தக் கூட்டத்தில் நான் நடத்துகிறேன் எனவும் பிக்கட்டி பகுதியில் நிழற்குடை அமைக்க பூசை போடப்பட்டுள்ளது இதற்காக எவ்வளவு தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டது என்பது தெரியாது கோப்புகளை பார்த்து தான் சொல்ல இயலும் என தெரிவித்தார் .

இந்த விவகாரம் தொடர்பாக பேரூராட்சி தலைவர் பங்கஜம் கூறுகையில் : புதிதாக பொறுப்பேற்றுள்ள செயல் அலுவலர் தலைவர் என்ற முறையில் என்னிடம் எதையும் கலந்து ஆலோசிக்காமல் தன்னிச்சையாக செயல்பட்டு வருகிறார் நான் போட்டியிட்டு வெற்றி பெற்ற வாழ்வில் நடைபெறும் சபா கூட்டம் குறித்து கூட எனக்கு தகவல் தெரிவிக்கவில்லை . இதுபோல் அலுவலகத்தில் உள்ள அதிகாரிகளும் எந்த தகவலும் கொடுப்பதில்லை மக்கள் பணிகள் தொடர்ந்து பாதித்து வருவதாக கூறினர் . இந்த பேரூராட்சியில் ஏற்கனவே பல்வேறு சர்ச்சைகள் ஏற்பட்டு வரும் நிலையில் தலைவர் மற்றும் செயல் அலுவலர் இடையே ஏற்பட்டு வரும் இந்த மோதலால் மக்களுக்கான வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ள சிக்கல் ஏற்படும் சூழல் உருவாகியுள்ளது . எனவே இது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொது மக்கள் வலியுறுத்தியுள்ளனர் .

# மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட கலெக்டர் தலைமையில் நடைபெற்றது

திண்டுக்கல், செப். 17
திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட கலெக்டர் மொ.நா.பூங்கொடி தலைமையில் நடைபெற்றது.

தமிழக அரசின் உத்தரவின்படி, பொதுமக்களின் குறைகளை களைவதற்காகவும், பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்று, உரிய விசாரணை மேற்கொண்டு, தகுதியான பயனாளிகளுக்கு அரசின்



நலத்திட்ட உதவிகள் வழங்குவதற்காகவும், மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட கலெக்டர் தலைமையில் திங்கள்கிழமை தோறும் நடைபெற்று வருகிறது. இன்றைய கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து 160 மனுக்கள் பெறப்பட்டன. பொதுமக்களின் கோரிக்கை மனுக்களை, சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் வழங்கி தகுதியான மனுக்கள் மீது விரைந்து நடவடிக்கை மேற்கொள்ள மாவட்ட கலெக்டர் அறிவுறுத்தினார்.

# திருப்பூர் ஸ்ரீ ஆதிகேசவ பெருமாள் கோவில் கும்பாபிஷேகம்: சீர்வரிசை வழங்கிய இஸ்லாமியர்கள்



மங்கலம், செப். 17
திருப்பூர்மாவட்டம் மங்கலம் பகுதியில் ஸ்ரீ தேவி, பூதேவி சமேத ஸ்ரீ ஆதிகேசவ பெருமாள் கோவில் உள்ளது. இந்த கோவில் வளாகத்தில் ஸ்ரீ விஷ்வக்சேனர், ஸ்ரீ கருடாழ்வார், ஸ்ரீ பக்த ஆஞ்சநேயர் மற்றும் பரிவார தெய்வங்கள் உள்ளன. ஸ்ரீ ஆதிகேசவ பெருமாள் கோவில் மகா கும்பாபிஷேக விழா இன்று காலை நடைபெற்றது. இதையொட்டி மங்கலம் இஸ்லாமியர்களின் பூர்வீக பள்ளிவாசலான மங்கலம் சுன்னத்வல் ஜமாஅத் பெரியபள்ளிவாசல் சார்பில் மங்கலம் பெரிய பள்ளிவாசலில் இருந்து ஆதிகேசவ பெருமாள் கோவிலுக்கு 7 சீர்வரிசை தட்டுகள் ஊர்வலமாக கொண்டு வரப்பட்டது.

அவை கோவில் திருப்பணிக் குழுமற்றும்கும்பாபிஷேக விழாக்கமிட்டி நிர்வாகிகளிடம் வழங்கப்பட்டது. மத நல்லிணக்கத்துக்கு எடுத்துக்காட்டாக நடைபெற்ற நிகழ்வு காண்போரை ஆச்சரியப் படவைத்தது. இந்தநிகழ்ச்சியில் பொதுமக்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# அவருக்கு பிறகுதான் தோனி...பிடித்த கிரிக்கெட் வீரர்கள் குறித்து பேசிய 'லப்பர் பந்து' நடிகர் ஹரிஷ் கல்யாண்



கனா, எப்.ஐ.ஆர் படங்களில் இணை இயக்குனர் மற்றும் நெஞ்சுக்கு நீதி படத்திற்கு வசனம் எழுதிய தமிழரசன் பச்சமுத்து இயக்குனராக அறிமுகமாகும் திரைப்படம் 'லப்பர் பந்து'. இப்படத்தை சர்தார், காரி, ரன் பேபி ரன் உள்ளிட்ட படங்களை தயாரித்த பிரின்ஸ் பிக்சர்ஸ் நிறுவனம் தயாரிக்கிறது.

இப்படத்தில் ஹரிஷ் கல்யாண் மற்றும் அட்டகத்தி தினேஷ் இணைந்து கதாநாயகர்களாக நடிக்கின்றனர். சுவாசிகா விஜய் மற்றும் வதந்தி வெப் தொடரின் மூலம் பிரபலமடைந்த சஞ்சனா கிருஷ்ணமூர்த்தி கதாநாயகிகளாக நடிக்கின்றனர். மேலும் தேவதர்ஷினி, பால சரவணன் உள்ளிட்ட பலர் முக்கிய கதாபாத்திரங்களில் நடிக்கின்றனர். இந்த படத்துக்கு ஷான் ரோல்டன் இசையமைத்துள்ளார். தினேஷ் புருஷோத்தமன் ஒளிப்பதிவு செய்துள்ளார். பியார் பிரேமா காதல் படத்தில் கதாநாயகனாக நடித்து பிரபலமானவர் நடிகர் ஹரிஷ் கல்யாண். 'லப்பர் பந்து' படம் வரும் 20ம் தேதி திரையரங்குகளில் வெளியாக உள்ளநிலையில், பிடித்த கிரிக்கெட் வீரர்கள் யார் என்பது குறித்த கேள்விக்கு ஹரிஷ் கல்யாண் பதிலளித்திருக்கிறார். இது குறித்து அவர் கூறுகையில்,

'சின்ன வயதில் இருந்தே சச்சினுடைய கிரிக்கெட்டை பார்த்து வளர்ந்ததால் என்னுடைய முதல் தேர்வு சச்சின்தான். அதற்குபின் நம்ம தல தோனி. தோனியை பத்தி சொல்லவே வேண்டாம். அனைவருக்கும், குறிப்பாக நம்ம தமிழ் மக்களுக்கு தல என்பது ஒரு எமோஷன். வெளிநாட்டு கிரிக்கெட் வீரர்களில் பாப் டுபிளஸிஸ் பிடிக்கும். அதுக்கும் ஒரு சின்ன காரணம் உள்ளது. ஏனென்றால், அவர் சிஎஸ்கே அணியில் ஆடியுள்ளார். பிடித்த பவுலர் என்றால் பும்ரா. குறிப்பாக அவர் வீசும் யார்கர் எனக்கு ரொம்ப பிடிக்கும்,' என்றார்.

# 'தமிழ் சினிமாவிற்கு அது தேவையில்லை' நடிகை ஐஸ்வர்யா ராஜேஷ்



தமிழ் சினிமாவின் முன்னணி நடிகைகளில் ஒருவராக வலம் வருபவர் ஐஸ்வர்யா ராஜேஷ். இவர் அட்டகத்தி படத்தில் சிறிய கதாபாத்திரத்தில் நடித்து ரசிகர்களை கவர்ந்தார். அதைத்தொடர்ந்து, காக்கா முட்டை, தர்மதுரை, ரம்மி, கனா, சாமி 2, வடசென்னை உள்ளிட்ட படங்களில் நடித்து பிரபலமானார்.

தற்போது இவர், நடிகர் டொவினோ தாமஸ், நடிகை கீர்த்தி ஷெட்டி உள்ளிட்டோர் நடிப்பில் உருவான ஏ.ஆர்.எம் படத்தில் நடித்துள்ளார். இப்படம் கடந்த 12ம் தேதி ஓணம் பண்டிகையை முன்னிட்டு வெளியானது. மேலும், கன்னட சூப்பர் ஸ்டார் சிவராஜ்குமாருக்கு ஜோடியாக 'உத்தரகாண்டா' படத்திலும் ஐஸ்வர்யா ராஜேஷ் நடித்துவருகிறார். இந்த படம் மூலம் ஐஸ்வர்யா ராஜேஷ் கன்னட திரையுலகில் அறிமுகமாகியுள்ளார்.

இந்நிலையில், தமிழ், மலையாளம், தெலுங்கு, இந்தி உள்ளிட்ட மொழி படங்களில் நடித்து வரும் ஐஸ்வர்யா ராஜேஷ், ஹேமா கமிட்டி மற்றும் நடிகைகள் அளிக்கும் பாலியல் புகார் பற்றி பேசி இருக்கிறார். இது குறித்து அவர் கூறுகையில்,

'எனக்கு அந்த மாதிரி எதுவும் நடக்கவில்லை. எப்பொழுதுமே அது நடக்க கூடாது என்றுதான் நாம் நினைப்போம். தமிழ் சினிமாவில் அப்படி ஒரு விஷயம் இதுவரை நடக்கவில்லை என நினைக்கிறேன். அதனால், இப்போதுவரை ஹேமா கமிட்டி போன்று ஒன்று தேவைப்படவில்லை. அப்படி எதாவது நடந்தால் அதை எப்படியாவது தடுக்க வேண்டும் . அவர்களுக்கு கடுமையான தண்டனை வழங்க வேண்டும். பெண்கள் பாதுகாப்புதான் முதலில் முக்கியம்,' என்றார்.

நாட்டையே உலுக்கிய ஹேமா கமிட்டி அறிக்கையை ஓய்வு பெற்ற நீதிபதி ஹேமா தலைமையிலான குழு தாக்கல் செய்தது. இந்த அறிக்கையை கேரள அரசு சமீபத்தில் வெளியிட்டது. அதனைத்தொடர்ந்து பல நடிகைகள், நடிகர்கள், டைரக்டர்கள் மற்றும் தயாரிப்பாளர்களுக்கு எதிராக பாலியல் புகார்களை தெரிவித்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# சர்வதேச கிரிக்கெட்டில் 4வது வீரராக விராட் கோலி படைக்க உள்ள மாபெரும் சாதனை




இந்திய கிரிக்கெட் அணி அடுத்ததாக சொந்த மண்ணில்வங்காளதேசத்திற்குஎதிராக2போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாட உள்ளது. அதன்படி இவ்விரு அணிகளுக்கு இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி வரும் 19ம் தேதி சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் நடைபெற உள்ளது.

இந்த தொடரில் இந்திய அணியின் நட்சத்திர வீரரான விராட் கோலி சர்வதேச கிரிக்கெட் வரலாற்றில் 4வது வீரராக மாபெரும் சாதனை படைக்க வாய்ப்புள்ளது.

அதன் விவரம் பின்வருமாறு:

சர்வதேச கிரிக்கெட் வரலாற்றில் விராட் கோலி இதுவரை 591 இன்னிங்ஸ்களில் விளையாடி 26942 ரன்கள் குவித்துள்ளார். இவர் இந்த தொடரில் 58 ரன்கள் அடிக்கும் பட்சத்தில் சர்வதேச கிரிக்கெட் வரலாற்றில் குறைந்த இன்னிங்சில் 27,000 ரன்கள் குவித்த 4வது வீரர் என்ற மாபெரும் சாதனையை படைப்பார். இந்த பட்டியலில் முதல் 3 இடங்களில் முறையே சச்சின் டெண்டுல்கர், குமார் சங்கக்கரா மற்றும் ரிக்கி பாண்டிங் ஆகியோர் உள்ளனர்.

# செஸ் ஒலிம்பியாட்: 5வது சுற்றில் இந்திய அணி வெற்றி



45வது செஸ் ஒலிம்பியாட் போட்டி ஹங்கேரி தலைநகர் புடாபெஸ்டில் நடந்து வருகிறது. 11 சுற்றுகள் கொண்ட இந்த போட்டியில் நேற்று நடந்த 5வது சுற்றில் இந்திய ஆண்கள் அணி அஜர்பைஜானை தோற்கடித்தது.

இதில் வெள்ளை நிற காய்களுடன் ஆடிய இந்தியாவின் குகேஷ், அர்ஜூன் எரிகாசி ஆகியோர் சிறப்பாக விளையாடி தங்களது ஆட்டங்களில் வெற்றியை வசப்படுத்தினர். தமிழகத்தை சேர்ந்த பிரக்ஞானந்தா நிஜாத் அப்சோவ் இடையிலான ஆட்டம் 34வது காய் நகர்த்தலில் டிராவில் முடிந்தது. இந்திய ஆண்கள் அணி தொடர்ச்சியாக பெற்ற 5வது வெற்றி இதுவாகும். இதன் பெண்கள் பிரிவில் இந்தியா 2½1½ என்ற கணக்கில் கஜகஸ்தானை வென்றது.

# கையில் எலும்பு முறிவுடன் விளையாடி வெள்ளிப்பதக்கம் வென்ற நீரஜ் சோப்ரா




பெல்ஜியம் தலைநகர் பிரஸ்சல்சில் நடந்த டைமண்ட் லீக் தொடரின் இறுதிப்போட்டியில் ஈட்டி எறிதலில் பாரீஸ் ஒலிம்பிக்கில் வெள்ளிப்பதக்கம் வென்ற இந்திய வீரர் நீரஜ் சோப்ரா களம் இறங்கினார். மொத்தம் 6 சுற்றுகளின் முடிவில் நீரஜ் சோப்ரா 2வது இடம் பிடித்து வெள்ளிப்பதக்கம் வென்றார். அதிகபட்சமாக 3வதுசுற்றில்87.86மீட்டர்எறிந்தார்.அதாவதுஒருசென்டிமீட்டரில் சோப்ரா தங்கப்பதக்கத்தை இழந்தார். 87.87 மீட்டர் எறிந்த கிரனடாவின் ஆண்டர்சன் பீட்டர்ஸ் முதல் இடம் பிடித்து தங்கம் வென்றார்.

இந்த நிலையில்,கையில் எலும்பு முறிவுடன் இந்த தொடரில் விளையாடி நீரஜ் சோப்ரா வெள்ளிப்பதக்கம் வென்றுள்ளார்.இது தொடர்பான நீரஜ் சோப்ரா வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் ,

டைமண்ட் லீக் தொடருக்காக பயிற்சியில் ஈடுபட்டிருந்தபோது இடது கை விரல் எலும்பு முறிந்துவிட்டது. எப்படியாவது தொடரில் விளையாடிவிட வேண்டும் என்ற மன உறுதியுடன் இருந்தேன். வலி மிகுந்த சவாலாக இருந்தது. அணியினரின் உதவியுடன் தொடரில் பங்கேற்க முடிந்தது.

இது இந்த ஆண்டின் கடைசி போட்டியாகும். எனது சொந்த எதிர்பார்ப்புகளை என்னால் பூர்த்தி செய்ய முடியவில்லை என்றாலும், இதில் இருந்து நிறைய கற்றுக்கொண்டதாக உணர்கிறேன். அனைவருக்கும் நன்றி சொல்ல விரும்புகிறேன். 2024 என்னை ஒரு சிறந்த விளையாட்டு வீரராகவும், நபராகவும் ஆக்கியுள்ளது. 2025ல் சந்திப்போம் . என தெரிவித்துள்ளார்

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.